## காஞ்சிபுரம் மாவட்டம்

**சமூக நலத்துறை சார்பில் 675 பயனாளிகளுக்கு தாலிக்கு 5.4 கிலோ தங்கத்தை மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்ஜமின் வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா. பொன்னையா, இ.ஆ.ப., உடனிருந்தார்.**

காஞ்சிபுரம் அண்ணா அரங்கில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் சமூக நலத்துறை சார்பில் 675 பயனாளிகளுக்கு தலா 8 கிராம் வீதம் 5.4 கிலோ தங்கத்தை மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் வழங்கினார்.

**இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர்,**

மாண்புமிகு முன்னாள் முதலைமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்த சீரிய திட்டங்கள் உன்னத திட்டம்தான் பெண்களுக்கு திருமண நிதியுதவி மற்றும் தாலிக்கு தங்கம் வழஙகும் திட்டம் ஆகும். வேறு எந்த மாநிலத்திலும் செயல்படுத்தாத சீரிய திட்டமாகும். காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2011-2012ம் ஆண்டு முதல் 2017-2018ம் ஆண்டு வரையில 44714 நபர்களுக்கு தாலிக்கு தங்கமாக 188.016 கிலோ கிராமாகவும், திருமண நிதியுதவியாக 146 கோடியே 53 இலட்சத்து 75000ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

அம்மாவின் வழியில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு மாண்புமிகு.முதலைமைச்சர் எடப்பாடியார் மற்றும் துணை முதலைமைச்சர் ஓ.பி.எஸ். ஆகியோர் தலைமையில் அம்மா செயல்படுத்திய அனைத்து திட்டங்களையும் தொடர்ந்து செயல்படுத்தபட்டு வருகிறது. அம்மாவின் வழியில் தமிழ்நாடு அமைதி பூங்காவாக சட்டம் ஒழுங்கு சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு மக்கள் நிம்மதியாக வாழும் மாநிலமாக திகழ்கிறது. அம்மா அவர்கள் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் அம்மா உணவக திட்டம் செயல்படுத்தப்பட்டு, இன்று 1000 ரூபாய் ஓய்வூதியம் பெறும் முதியோர்கள் ஒரு நாளைக்கு ரூபாய்.20ல் மூன்று வேளை வயிறார உண்டு, தங்கள் வாழ்க்கையை மாதத்தில் 600 ரூபாயில் யாருடைய தயவுமின்றி வாழமுடிகிறது. கருவுற்ற தாய்மார்கள் பயன்பெறும் வகையில் பேறுகால நிதியுதவியை ரூபாய்.12000திலிருந்து ரூபாய்.18000மாக உயர்த்தி வழங்கியுள்ளார்கள். இவ்வாறாக கருவில் இருக்கும் குழந்தைகள் முதல் மாணவர்கள், திருமணமாகும் இளைஞர்கள் முதியோர்கள் வரை பயன்பெறும் வகையில் அம்மா அவர்கள் சிந்தித்து செயல்படுத்திய திட்டங்களை தொடர்ந்து தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.பழனி, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நூர்முகமது, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், வாலாஜாபாத் திரு.பா.கணேசன், திரு.வி.சோமசுந்தரம், திருமதி.மைதிலி திருநாவுக்கரசு, திரு.காஞ்சி.பன்னீர்செல்வம், வருவாய் கோட்ட அலுவலர் திரு.க.ராஜு, மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.சங்கீதா மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.பழனி, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நூர்முகமது, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், வாலாஜாபாத் திரு.பா.கணேசன், திரு.வி.சோமசுந்தரம், திருமதி.மைதிலி திருநாவுக்கரசு, திரு.காஞ்சி.பன்னீர்செல்வம்,